இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்வி முதுமாணி - 2012
இறுதிப் பரீட்சை

**ESP 2318 – கல்வியில் முகாமைத்துவம்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 05 மே 2013 நேரம்: மு.ப 09.30 – ந.ப 12.30 வரை

*ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.*

01. (i) முகாமைத்துவச் செயற்பாடுகளை உங்களது நிறுவனத்தை தொடர்புபடுத்தி விளக்குக. (08 புள்ளிகள்)

(ii) "முகாமைத்துவ வகிபங்குகள் முகாமைத்துவச் செயற்பாடுகளைவிட பரந்துபட்டவை" மேற்படி கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்களது விடையை உதாரணங்கள் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) உங்களது நிறுவனத்தில் மிக முக்கியமான பிரச்சினை ஒன்றினைத் தெரிவுசெய்து அதனை தீர்க்கக்கூடியதாக ஒரு செயற்திட்டத்தை விருத்தி செய்க. (15 புள்ளிகள்)

02. (i) ஒரு முகாமையாளருக்கும் ஒரு தலைவருக்கும் இடையிலுள்ள வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துக.

(ii) ஏதேனும் ஒரு தலைமைத்துவ கோட்பாட்டினை தெரிவுசெய்து அதனை உங்களது நிறுவனத்தில் நிலவும் தலைமைத்துவத்துடன் தொடர்புபடுத்தி விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க. (15 புள்ளிகள்)

(iii) உங்களது நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்துவதற்கு எவ்வகையான தலைமைத்துவத்தை நீங்கள் விதந்துரை செய்வீர்கள்? (15 புள்ளிகள்)

03. (i) உங்களது நிறுவனத்தில் அல்லது உங்களுக்கு பரிச்சயமான வேறு ஏதேனும் நிறுவனத்தில் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மாற்றத்தினை அறிமுகம் செய்க. (08 புள்ளிகள்)

(ii) மாற்றத்தை ஏன் சிலர் எதிர்க்கிறார்கள்? உங்களது விடையை உதாரணம் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) ஒரு மாற்ற முகாமைத்துவ மாதிரிகையை அறிமுகஞ்செய்து அதன் சிறப்புக்களையும் குறைபாடுகளையும் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

பின்வருவனவற்றுள் ஏவையேனும் மூன்றிற்கு (03) சுருக்கக்குறிப்பு வரைக.

(i) நிறுவன மட்டத்தில் திட்டமிடல்

(ii) பரிமாற்றத் தலைமைத்துவமும், உருமாற்றத் தலைமைத்துவமும்

(iii) இலங்கையில் கல்வி முகாமைத்துவப் பயிற்சிகள்

(iv) பாடசாலைகளில் தொடர்பாடல்

(v) விஞ்ஞான முகாமைத்துவ அணுகுமுறைக்கும் நடத்தை முகாமைத்துவ அணுகுமுறைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்

(3 x 11 = 33 புள்ளிகள்)

(i) இலங்கையில் கல்வி நிர்வாக வரலாறு என்பது உண்மையில் கல்வி நிர்வாகத்தை பரவலாக்கும் வரலாறாகும்" விமர்சிக்குக.

(08 புள்ளிகள்)

(ii) இலங்கையின் தற்போதைய நிர்வாக கட்டமைப்பை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) இலங்கை தேசிய ஆணைக்குழு (2003) முன்வைத்த கல்வி முகாமைத்துவ சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

(15 புள்ளிகள்)

(i) "பிணக்கு" என்னும் எண்ணக்கருவினை சுருக்காக விளக்குக.

(08 புள்ளிகள்)

(ii) நிறுவனங்களில் பிணக்குகளை ஏற்படுத்தும் காரணிகள் யாவை? உதாரணம் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) பிணக்கு முகாமைத்துவ மாதிரிகை ஒன்றினை தெரிவுசெய்து அதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் பற்றி விமர்சன ரீதியாக பகுப்பாய்வினை முன்வைக்குக.

(15 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)